செ.வெ.எண்: 43 / மார்ச் /2020 நாள்: 15.03.2020

**திருச்சிராப்பள்ளி மாவட்டம் தூய வளனார் தன்னாட்சி கல்லூரியில் அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தினம் மற்றும் 543 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1.33 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.வெல்லமண்டி என்.நடராஜன் அவர்கள், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திருமதி.எஸ்.வளர்மதி ஆகியோர் இன்று (15.03.2020) வழங்கினார்கள்.**

----------------

திருச்சிராப்பள்ளி மாவட்டம் தூய வளனார் தன்னாட்சி கல்லூரியில் அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தினம் மற்றும் 543 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1.33 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு, இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.வெல்லமண்டி என்.நடராஜன் அவர்கள், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திருமதி.எஸ்.வளர்மதி ஆகியோர் இன்று (15.03.2020) வழங்கினார்கள்.

**மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.வெல்லமண்டி என்.நடராஜன் அவர்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி பேசியதாவது:**

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 3ம் தேதியினை அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தின விழாவாக கொண்டாடப்படுகிறது. அதன்படி திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 15.03.2020 இன்று அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தினமாகவும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவாகவும் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவில் சுமார் 543 பயனாளிகளுக்கு ரூ.1,33,08,074/- மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படவுள்ளது.

100 மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர், 56.40 இலட்சம் மதிப்பீட்டிலும், 158 நபர்களுக்கு மோட்டார் பொருத்திய தையல் இயந்திரம், 6.64,074 இலட்சம் மதிப்பீட்டிலும், மாற்றுத்திறனாளிகளுக்கான திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ் ரூ.25,000 வீதம் 18 பயனாளிகளுக்கு 8 கிராம் தங்கமும், ரூ.50,000 நிதியுதவியுடன் 8 கிராம் தங்கமும், 24 பயனாளிகளுக்கு வழங்கப்படுகிறது. ஆக மொத்தம் திருமண நிதியுதவி திட்டத்தில் 42 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.16,75,000 மதிப்பீட்டிலும் வழங்கப்படுகிறது. சுய வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் மூலம் 1 நபருக்கு ரூ.1,25,000மும், மாற்றுத்திறனாளிகளை ஆவின் அமைப்பதற்கு 24 நபர்களுக்கு

தலா ரூ.50,000 வீதம் ரூ.12 இலட்சமும், மனவளர்ச்சி குன்றியோர்க்கான பராமரிப்பு உதவித்தொகை மாதம்,மாதம் தலா ரூ.1500 வீதம் பெறுவதற்கு 150 பயனாளிகளுக்கு ஆணையும். கடுமையான பாதிக்கப்பட்டோர்களுக்கு மாதந்திர பராமரிப்புத் உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் மாதம், மாதம் தலா 1500 வீதம் 7 நபர்களுக்கு ஆணையும், காதொலி கருவி தலா ரூ.3000 வீதம் 10 நபர்களுக்கு ரூ.30,000 மதிப்பீட்டிலும், மாற்றுத்திறனாளி உதவியாளருக்கு ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் தலா ரூ.1000 வீதம் 25 பயனாளிகளுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கான நல வாரியத்திட்டத்தின் கீழ் 25 நபர்களுக்கு ரூ.4.25 இலட்சம் மதிப்பீட்டில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத்திட்டத்தின் கீழ் 1 நபருக்கு

ரூ.1.77 இலட்சம் மதிப்பீட்டில் நவீன செயற்கை அவயமும் ஆக மொத்தம் 543 மாற்றுத்திறனாளிகளுக்கு 1,33,08,074 மதிப்பீட்டில் நலதிட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. அம்மா அவர்கள் ஆட்சி காலத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு நல பல திட்டங்களை கொண்டு வந்தார்கள். அம்மா அவர்கள் வழியில் ஆட்சி செய்யும் தமிழக முதல்வர் அவர்கள் அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டங்கள் அனைத்தையும் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். மாற்றுத்திறனாளிகள் இது போன்ற திட்டங்கள் மூலம் நல திட்டங்கள் தொடர்ந்து கிடைத்திட இந்த அரசுக்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். இவ்வாறு மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

**மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் நலத்திட்ட உதவிகள் வழங்கி பேசியதாவது:**

அம்மா அவர்கள் ஆட்சி காலத்தில் தான் மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்டங்களை கொண்டு வந்தார்கள். அம்மா அவர்கள் கொண்டு வந்த சாதனை திட்டங்கள் அனைத்தையும், மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். இன்று 543 மாற்றுத்திறனாளிகளுக்கு 1,33,08,074 மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ் மாற்றுத்திறனாளிகளை திருமணம் செய்து கொள்ளும் நபர்களுக்கு திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ் உதவித்தொகையாக ரூ.50 சதவீதம் காசோலையாகவும், மீதமுள்ள 50 சதவீதம் தேசிய சேமிப்பு பத்திரமாகவும் மற்றும் 8 கிராம் தங்க நாணயமும் வழங்கப்பட்டு வருகின்றது. நான்கு வகையான திட்டத்தின் கீழ் ரூ.31.34 இலட்சம் மதிப்பில் 399 மாற்றுத்திறனாளிகள் பயனடைந்துள்ளனர்.

2019-20 ஆண்டு முதல் இத்திட்டத்தின் கீழ் 20 இலட்சம் மதிப்பில் 26 நபர்களுக்கு திருமண நிதியுதவி வழங்கப்படவுள்ளது. சுயவேலைவாய்ப்பு வங்கிக்கடன் மான்யம் வழங்கும் திட்டத்தின் கீழ் 508 நபர்களுக்கு ரூ.27.89 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 2018-19 ஆண்டு முதல் இத்திட்டத்தின் கீழ் சுய வேலைவாய்ப்பு வங்கிக்கடன் பெறும் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் மான்யம் ரூ.10000/-லிருந்து ரூ.25000/- உயர்த்தி வழங்கிட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் உத்தரவிட்டுள்ளார்கள். அதன்படி 2018-19, 2019-2020 ஆம் நிதியாண்டில் 175 நபர்களுக்கு ரூ.40.00 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கு சுயதொழில் தொடங்க ஆவின் நிறுவனத்தில் பால் உற்பத்தி பொருட்கள் விற்பனை மையம் அமைக்க 7 நபர்களுக்கு தலா ரூ.1,75,000/- வழங்கப்படவுள்ளது.

2019-20 ஆம் ஆண்டில் சட்டமன்ற பேரவையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் மாற்றுத்திறனாளிகளின் பொருளாதார நிலைமையை மேம்படுத்திட ஆவின் நிறுவனத்திற்கு பயனாளிகள் செலுத்தவேண்டிய முன் தொகை ரூ.25,000/-லிருந்து ரூ.50000/-மாக உயர்த்தி வழங்கிட ஆணையிடப்பட்டது. அதன்படி இவ்வாண்டில் 24 பயனாளிகளுக்கு தலா ரூ.50000/-வீதம் ரூ.12,00,000/- வழங்கப்படுகிறது. மாற்றுத்திறனாளிகள் கல்வி, பயிற்சி, பணிக்கு செல்ல ஏதுவாக அவர்களுக்கு அரசு பேருந்துகளில் பயணிக்க பயண சலுகை வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் 2011-12 முதல் ரூ.875.50 இலட்சம் மதிப்பில் 20237 நபர்களுக்கு பயண சலுகை வழங்கப்பட்டுள்ளது.

நமது மாவட்டத்தில் 2019-20 ஆம் ஆண்டில் 100 நபர்களுக்கு இணைப்புச்சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கிடவும், 158 நபர்களுக்கு கை, கால்கள் பாதிக்கப்பட்டோர், காது கேளாத வாய் பேச இயலாத மாற்றுத்திறனாளிகளுக்கு விலையில்லா மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள் போன்ற நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. இது போன்ற அரசு வழங்கும் நலத்திட்ட உதவிகளை பெற்று மாற்றுத்திறனாளிகள் தங்கள் வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.இரா.இரவிச்சந்திரன், இந்து சமய அறநிலையத்துறை மாவட்ட குழுத்தலைவர் திரு. கே.சி.பரமசிவம் இளநிலை மறுவாழ்வு அலுவலர் திரு.செ.உலகநாதன் மற்றும் மாற்றுத்திறனாளிகள், கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருச்சிராப்பள்ளி.